**வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திருமதி. எஸ். மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**
**ந.க.எண்:1647/மாஓ5/கலை/ஒபக/2023, நாள்: 17.11.2023**

பொருள்: வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – அரசு பள்ளி மாணவர்களுக்கான கலைத்திருவிழா 2023–24 – மாநில அளவிலான போட்டிகள் நடைபெறும் இடங்கள் மற்றும் நாட்கள் பற்றிய தகவல் தெரிவித்தல் – சார்பு.

பார்வை: தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–600006, ந.க.எண்:ACE/204/ஆ3/கலை/ஒபக/2023, நாள்:13.11.2023.

--------

2023–2024 ஆம் ஆண்டிற்கான அரசு பள்ளி மாணவர்களுக்கான மாநில அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் 21.11.2023 முதல் 24.11.2023 ஆகிய 4 நாட்களில் பின்வரும் மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

| வ.எண். | மாநில அளவிலான போட்டிகள் நடைபெறும் மாவட்டம் | பிரிவுகள் |
|---|---|---|
| அரசு பள்ளிகள் | | |
| 1 | வேலூர் | 6 – 8 வகுப்பு போட்டிகள் |
| 2 | செங்கல்பட்டு | 9–10 வகுப்பு போட்டிகள் |
| 3 | திருச்சிராப்பள்ளி | 11–12 வகுப்பு போட்டிகள் |

**மாணவர்கள் பாதுகாப்பு வழிகாட்டும் நெறிமுறைகள்:**

- மாநில அளவில் நடைபெறும் கலைத் திருவிழா போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் பெற்றோரின் ஒப்புதல் கடிதம் பெற்று கலந்து கொள்ளுதல் வேண்டும்.
- மாணவிகள் போட்டிகளில் கலந்து கொள்ளும் பட்சத்தில் பெண் ஆசிரியர் ஒருவர் கண்டிப்பாக பள்ளிகளில் இருந்து உடன் அழைத்து வருதல் வேண்டும்.
- போட்டிகள் நடைப்பெறும் இடங்களுக்கு செல்ல பேருந்துகளில் பயணிக்கும் பொழுது, அனைத்து மாணவர்களும் பேருந்தில் ஏறியதை உறுதி செய்த பின்னர் மட்டுமே உடன்வரும் ஆசிரியர்கள் பேருந்தில் ஏறுதல் வேண்டும். பேருந்து நின்ற பின்னர் மட்டுமே மாணவர்களை இறங்க அறிவுறுத்த வேண்டும்.
- அறிமுகம் இல்லாத நபர்களிடம் பேசுவதையோ, அவர்களிடமிருந்து கைபேசி எண் பெறுவதையும் மாணவ/மாணவிகள் கண்டிப்பாக தவிர்க்க அறிவுறுத்துதல் வேண்டும். இதனை உடன்வரும் ஆசிரியர்கள் கண்காணித்தல் வேண்டும்.
- மாணவர்கள் விலை உயர்ந்த அணிகலன்கள் அணிந்து வருதல் கூடாது.
- 10 மாணவர்களுக்கு ஒரு ஆண் ஆசிரியர் வீதமும் 10 மாணவிகளுக்கு ஒரு பெண் ஆசிரியர் வீதமும் உடன் செல்ல வேண்டும்.
- மாணவ/மாணவிகள் மற்றும் வழித்துணையாளர்களாக வரும் ஆசிரியர்கள் போட்டிகள் நடைபெறும் மாவட்டங்கள் மற்றும் மையங்களுக்கு சென்று வருவதற்கான பேருந்து வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பேருந்து வசதி மாவட்ட திட்ட அலுவலகம் காட்பாடியிலிருந்து புறப்படும்.

| வ.எண் | மாவட்டம் | போட்டிகள் நடைபெறும் நாட்கள் | மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மாவட்ட திட்ட அலுவலகத்திற்கு வருகை புரிய வேண்டிய நாள் மற்றும் நேரம் | பேருந்து புறப்படும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | 21.11.2023 | 20.11.2023 – காலை 11.00 மணி | 12.00 பிற்பகல் |
| | | 22.11.2023 | 21.11.2023 – காலை 11.00 மணி | 12.00 பிற்பகல் |
| | | 24.11.2023 | 23.11.2023 – காலை 11.00 மணி | 12.00 பிற்பகல் |
| 2 | திருச்சி | 21.11.2023 | 20.11.2023 – காலை 08.00 மணி | 09.00 காலை |
| | | 22.11.2023 | 21.11.2023 – காலை 08.00 மணி | 09.00 காலை |

மேற்கண்ட நாட்களில் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்கள் மற்றும் வழித்துணையாளர்களாக வரும் ஆசிரியர்களை உரிய அறிவுரைகளை வழங்கி பாதுகாப்புடன் விடுவித்து அனுப்பி வைக்க வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சார்ந்த தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியில் பணிபுரியும் சார்ந்த ஆசிரியர்களை ஆகிய நாட்களில் தவறாமல் விடுவிக்க வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:

1. வேலூர், செங்கல்பட்டு மற்றும் திருச்சி மாவட்டங்களில் நடைபெறும் போட்டிகள் விவரங்கள்.
2. வேலூர் மாவட்டத்திலிருந்து மாநில அளவில் பங்கேற்க வேண்டிய மாணவர்களின் பெயர்ப்பட்டியல் (6 முதல் 12 ஆம் வகுப்பு வரை).

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம் – 6.

பெறுநர்:

1. அனைத்து வகை அரசு மேல்நிலை / உயர்நிலை / நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
2. முதல்வர், Seventh–Day–Adventist மெட்ரிக் மே.நி.பள்ளி, ஓட்டேரி, வேலூர் மாவட்டம்.
3. தலைமயாசிரியர், என்.கிருஷ்ணசாமி நிதியுதவி மே.நி.பள்ளி, சாய்நாதபுரம், வேலூர் மாவட்டம்.
4. முதல்வர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரி, வேலூர் மாவட்டம்.

நகல்:

1. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 6, அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மவாட்டம் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) வேலூர் மாவட்டம்.
4. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கநிலை) வேலூர் மாவட்டம்.
5. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
6. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.